# அன்றும் இன்றும் என்றும்

நம்புகின்றீர்களா? நியாயம் வெல்லும் என்று நம்புகின்றீர்களா? நீதி வெல்லும், உண்மை வெல்லும் என்றெல்லாம் நம்புகின்றீர்களா? ஒரு காலம் நான் இவற்றையெல்லாம் நம்பினேன். பிறகொரு காலம் இவற்றையெல்லாம் வெல்லப் பண்ண வேண்டும் என்று விரும்பினேன். இப்போதோ என்றால் வெட்ட வெளிதனில் நட்ட நடுதனில் நெட்ட நெடுமரமாய் பாறி விழுந்து கிடக்கிறோம்.

இப்படி எல்லாம் நிகழும் என்று நினைத்தோமா? கனவில் கூட இப்படியொன்று நிகழும் என்று கருதினோமா? ஒரு தோல்வி வரும், அதையடுத்து நூறு வெற்றி வரும். ஓர் அடி பின்வாங்குவோம். உடன் விரைந்து ஈரடி முன் பாய்வோம். அப்படித் தானே இவ்வளவு நாட்களும் நிகழ்ந்தது. வரலாறும் அதைத்தானே நமக்குச் சொன்னது.

ஆனால் இப்போது என்ன நிகழ்ந்தது. முகம் குப்புற விழுந்தோம். அப்படித்தானா? வெறுமனே வீழ்ந்தோமா? அல்ல வேரோடும் வேரடி மண்ணோடும் வீசி எறிபட்டு வீழ்ந்தோம். எழவே முடியாதபடிக்கு வீழ்ந்தோம். சொல்லொணா வலியுடன் வீழ்ந்தோம். ஈடு செய்ய முடியா இழப்புடன் வீழ்ந்தோம். இழக்கக்கூடாத பெரு மலைகளை இழந்தோம். இமயமலையையே இழந்தோமே. இப்படி ஒரு வீழ்ச்சி இப்படி ஓர் இழப்பு உலகில் எங்கேனும் நிகழ்ந்ததா? உலகில் எந்த ஓர் இனமாவது ஆற்றொணா இழப்பைச் சந்தித்திருக்கிறதா?

என்ன சொல்ல? ஆருக்குச் சொல்ல? நாங்கள் வீழ்ந்து விட்டு நாங்களே எழும்ப வேண்டும். எங்களைத் தூக்கி விட எவரும் இலர். கதறிக் கதறி நாங்கள் அழுது விட்டு எங்கள் கையைத் தூக்கி நாங்களே கண்ணீரைத் துடைத்து விட வேண்டும். ஆதரவாகக் கண்ணீரைத் துடைத்து விடவோ முதுகைத் தடவி விடவோ உலகில் எவர் கைகளும் இல்லை

சரி இப்படியே தான் இருக்கப் போகிறோமா? ஒரு மூலையில் குந்தி இருந்து ஓவென்று குழறி அழுது கொண்டு இருக்கப் போகிறோமா? கூடி நின்று ஒப்பாரி வைத்துக் குழறி அழப் போகிறோமா? எல்லாம் முடிந்து முழுசாய் இரண்டு மாதங்கள் முடிந்து விட்டன. இன்னும் அவமே பொழுதைப் போக்கப் போகின்றோமா?

நமக்காக நமது ஈழத் தமிழ் மக்களுக்காக நம் தலைவர் ஒரு கனவு கண்டார். தலைவர் கண்ட கனவை நாம் காற்றில் கரைய விடப் போகின்றோமா? எங்களுக்காக அவர் கண்ட கனவை எங்களுடைய கனவாய் ஆக்கி அதற்கு ஆவன செய்ய வேண்டாமா? ஆயுதம் தூக்க வேண்டும் என்றல்ல இதற்கு அர்த்தம். தியாகி திலீபனின் உண்ணா நிலையின் போது தலைவர் சொன்னார்: 'போராட்ட வழிமுறைகள் மாறலாம். ஆனால் இலட்சியம் மாறாது'

தலைவரின் அதே வாக்கியம் தான் இப்பொழுதும் அப்படியே நிகழ்கிறது. நமது போராட்ட வழிமுறைகள் மாறியிருந்தாலும் இலக்கும் இலட்சியமும் மாறவில்லை. கண் முன்னே பனைமரம் போல் அப்படியே நிற்கிறது. நாம் தான் முயல வேண்டும். துணிய வேண்டும்.

நாம் உண்மைகளை நேருக்கு நேராய்ப் பார்க்க வேண்டும். உண்மைகளை ஏற்றுக்கொள்ள மனதில் இடம் வைக்க வேண்டும். யதார்த்தத்தைப் புரிய வேண்டும். உண்மையென்ற நிலத்தில் அத்திவாரம் வெட்டிக் கட்டடம் கட்ட வேண்டும். பொய்யான வெளியில் கட்டடம் கட்டினால் பொல பொலவென்று உதிர்ந்து விடும் என்று அல்ல, கட்டடமே கட்ட முடியாது. உண்மைகளைக் காண் போம். எதையும் எதிர்கொள்வோம். முகம் சுளிக்காமல் மனம் சலிக்காமல் எதையும் எதிர்கொள்வோம்.

அன்றும் இன்றும் என்றும் எமக்குத் தலைவர் ஒருவரே. அவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன். அவர் இருக்கிறாரா இல்லையா என்ற விவாதம் இங்கு எதற்கு? அவர் இல்லை என்பது உண்மையானால் அதை ஒப்புக் கொள்ள வேண்டும். அவர் இருக்கிறார் ஆனால் இல்லையென்று சொல்லப்படுகிறது என்றால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏதோ அவசியத் தேவை கருதி அவசரக் காரணம் கருதி அப்படிச் சொல்லப்படுகிறது. அவ்வளவே தான். தலைவரின் இருப்புத் தொடர்பான ஒரு கருத்தை ஒருவர் சும்மா சொல்லிவிட்டுப் போக முடியாது. வதந்தியாகப் பரப்பலாமே தவிர எம் எதிரிகளைத் தவிர எவரும் அறுதியிட்டுச் சொல்லிவிட முடியாது. இது எமது பொதுப் புத்திக்கு (Common sense) புரிய வேண்டிய விசயம்.

## இரவி அருணாசலம்

**எழுதுவது என்னவெனில்**

தலைவர் இப்ப வருவார். பின்னே வருவார். மாவீரர் நாளில் தோன்றுவார் என்பதெல்லாம் நம்மைக் குழப்புகின்ற விசயங்கள். எம்மை இயங்க விடாமல் மறுக்கின்ற காரணிகள். அடுத்த அடி எடுத்து வைக்க விடாத தடைகள். எம்மை ஒன்றும் செய்ய விடாமல் சும்மா இருக்க வைக்கின்ற நிர்ப்பந்தங்கள். எம்மை இப்படிக் குழப்பி விடுவதே எதிரியின் நோக்கம். அவனின் விருப்பிற்கு ஏற்ப நாம் குழம்புவது அவனிற்கு அனுகூலம். எல்லாவற்றிலும் வெற்றிகளைக் குவிக்கின்ற எதிரி இதிலும் வெற்றி கொள்கிறான். மற்றைய வெற்றிகளுக்கு சர்வதேசம் உடந்தையாக இருந்தது. இந்த வெற்றிக்கு காரணம் நாங்களே. எங்கள் கண்களை நாங்கள் குத்துகிறோம். எல்லோரும் ஏறியிருந்து சவாரி செய்ய நாங்கள் தோதுவாய் இருக்கிறோம் என்பது மிகுந்த வேதனைக்குரியது. நாம் எப்போது நிமிரப் போகின்றோம்.

இப்பொழுது சில வெளிச்சப் பொட்டுக்கள் தெரிகின்றன. நம்பிக்கைக்குரிய ஒளி பரவுகிறது. தமிழ்த் தேசிய விடுதலைக்காக புலத்தில் பணிபுரிந்த யாவரும் சகல குழப்பங்களிலிருந்தும் விடுபட்டு ஒரு திசை நோக்கி வருகின்றனர். ஒரு குடையின் கீழ் அமர்கின்றனர். இது வரை காலமும் இயங்க முடியாமல் போனதற்குக் குழப்பங்கள் மாத்திரம் காரணமல்ல. விரக்தி,சோர்வு, வெறுமை, வேதனை, அவநம்பிக்கை, களைப்பு, தோல்வி என்று பல்வேறு காரணிகள். ஆனால் இப்போது அவை களையப்படுகின்றன. புத்துணர்ச்சியுடன் புறப்படுகின்றனர்.

உண்மையில் எங்கள் சமூகம் உயரிய சமூகம், உன்னத சமூகம். வேரோடும் வேரடி மண்ணோடும் வீசி எறிபட்டு வீழ்ந்து இரண்டு மாதங்களில் எழுவதென்றால் அது இலேசான காரியமல்ல. எந்த சமூகத்திற்கும் இது இயலாது. ஏனைய சமூகங்கள் யானைகள் போன்றவை. வீழ்ந்தால் எழக் காலம் எடுக்கும். எங்கள் சமூகம் குதிரை போன்றது. வீழ்ந்தால் வீழ்ந்த வேகத்திலேயே எழும். எழுந்து பாயும். நாங்கள் எழத் தொடங்கி விட்டோம். இனி வெற்றியும் விடுதலையும் நிச்சயம். எனக்கு அந்த ஒளி தெரிகிறது.

நம்புகின்றேன் நண்பர்களே. நாங்கள் வெல்லோம் நியாயம் வெல்லும் என்பதை நம்பவில்லை. ஆனால் நீதியை நியாயத்தை உண்மையை இந்த உலகிற்கு உணர வைப்போம். தலைவர் நமது விடுதலைப் போரை ஒரு கட்டத்திற்கு எடுத்து வந்திருக்கிறார். உயர்த்தி விட்டிருக்கிறார். நாம் எல்லோரும் ஒரு உந்துதல் கொடுத்து மேலும் உயர்த்துவோம். தளர்வுறோம். சோர்வுறோம் தயங்காது தலை கொடுப்போம். வாருங்கள்.

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

**போரும் இரசாயனப் பொருட்களும்.**

வன்னிமீது கொத்துக் குண்டுகளைப் போடாதே என்று தொடங்கி இரசாயனப் போரை நிறுத்து என்று ஒலித்த சுலோகங்கள், செவி சாய்க்க வேண்டியவர்களே அசட்டை செய்ததால் 50 ஆயிரம் அப்பாவிகளின் உயிரைக் குடித்தது.

இரசாயனப் பொருள்களில் அனேகமானவை கொடுமையான மனிதப் பேரவலத்தை ஏற்படுத்தும் திறம் கொண்டவை. எடுத்துக்காட்டிற்கு மஸ்ரட் வாயு என்பது தோலை எரிக்கிறது. கண்ணின் மென் சவ்வுகளை எரிக்கின்றது. போதாதற்கு சுவாசப் பையின் உட்பகுதியைக்கூடப் பாதிக்கிறது. கேட்கவே உடல் சிலிர்க்கிறது. பல்நாட்டுச் சட்டவிதிகள் அப்படியானவற்றை போருக்கு பயன்படுத்துவதைத் தடை செய்துள்ளன. தொழில் சார்ந்த மற்றும் மருத்துவத் தேவைகளுக்கான அவற்றின் உற்பத்தியைக் கூட மட்டுப்படுத்த சட்ட விதிகள் உள்ளன.

திண்ம, திரவ வாயு நிலையில் இப்படியான 70க்கு மேற்பட்ட இராசயனப் பொருட்கள் பட்டியலிடப் பட்டுள்ளன. இப்பொருட்கள் உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருட்கள் இருந்தால் எளிதில் இவற்றை தயார் செய்யலாம், தயாரிக்கப் பட்ட பின் உபயோகிக்கும் இடத்திற்கு கொண்டு செல்வதும் எளிது. தயாரிப்பதற்குத் தேவைப்படும் செலவும் குறைவு. அநேகமானவை நீண்டகாலம் வைத்திருந்து பயன்படுத்தக் கூடியவை. ஆபத்து என்னவென்றால் சிறு குழுக்கள் கூட பெருத்த சிரமமின்றி இவற்றைத் தயாரிக்கலாம். இரண்டாவது உலகப் போரின் பின் சிறையில் அடைக்கப் பட்டிருந்த ஜெர்மனியப் போர் வீரர்களை இலக்கு வைத்து செயல்பட்ட ஒரு யூதக் குழுவால் 2000 பேர் வரையானோரை பாதிப்புக்கு உள்ளாக்க முடிந்தது.

இவை செயல்படும் முறையை வைத்து இவற்றை குறைந்தது ஏழு வகையாகப் பிரிக்கலாம். முதலாவது பிரிவில் சுரப்பிகளின் செயற்பாட்டை தடுத்து நரம்பின் செயற்பாட்டைச் சீரற்றதாக்கும் சறின், சைக்கிலோசறின், போன்ற இரசாயனங்கள் அடங்கும். மூச்சடைப்பான் என்னும் இரண்டாவது வகையைச் சார்ந்த சைனோஜென் குளொறைட், ஹைறிஜென் சயனைட் போன்றவை நாளத்தினுள் குருதியின் சிகப்பு அணுவை அழித்து உயிர் வாயுவை உடல் பயன்படுத்த முடியாது செய்து மூச்சடைப்பை ஏற்படுத்துபவை. மூன்றாவது வகையைச் சார்ந்த கொப்பள ஊக்கிகள் உடல், கண், சுவாசப்பை ஆகியவற்றில் கொப்பளங்கள் உருவாக்க வல்லவை. ஈற்றில் சுவாசிக்க முடியாத நிலையை ஏற்படுத்த வல்லவை. இந்த வகைக்குள்தான் மஸ்ரட் வாயுவும் அடங்குகின்றது. நான்காவது வகையினுள் குளோறின், ஹைறிஜென் குளோறைட், பொஸ்ஜென் போன்றவை அடங்குகின்றன. இவையும் சுவாசிக்க முடியாத நிலையை ஏற்படுத்த வல்லவை. அதை விரைவில் ஏற்படுத்த வல்லவை. உயிர் தப்புபவர்கள் கூட எளிதில் சுவாசச் சிக்கல்களில் இருந்து தப்ப முடியாது. ஐந்தாவது வகை எம்மை தற்காலிகமாகத் திக்குமுக்காட வைக்கும் கண்ணீர் புகை போன்றவை. ஆறாவது வகையும் நரம்பின் செயற்பாட்டை முதலாவது வகைபோல் பாதிப்பவைதான். ஆனால் செயல்படும் விதத்தின் வித்தியாசம் காரணமாக சன்னி, மாயத்தோற்றம் போன்ற நிலைகளையும் உருவாக்க வல்லவை. கடைசி ஏழாவது வகைக்குள் றிசின், அப்றின் போன்ற இரசாயனங்கள் அடங்கினாலும் அவை எல்லாமே தாவரங்களிலிருந்தோ மற்றைய உயிரினங்களிலிருந்தோ பெறப்படுபவை. புரத உற்பத்தியை பாதிப்படையச் செய்பவை.

றிசின் என்பது, நாம் நன்கறிந்த முத்தாமணக்கம் விதைகளிலிருந்து பெறக் கூடியது. நல்ல காலமாக எண்ணையில் கரையாத இதன் தன்மை காரணமாக விதையில் இருக்கும் இது எண்ணையுடன் கலப்பதில்லை. அப்படிக் கரைந்தால் நாம் பேதி மருந்தாக வயிற்றோட்டத்தை ஊக்குவிக்க எடுக்கும் விளக்கெண்ணை எம் உயிரோட்டத்திற்கே முற்றுப் புள்ளி வைத்து விடும்.

பொலிடோல் வகையைச் சார்ந்ததும் நரம்பின் செயற்பாட்டைச் சீரற்றதாக்க வல்லதுமான முதலாவது வகைக்குள் அடங்கும் நிறமற்ற மணமற்ற எளிதில் ஆவியாகக்கூடிய சரின் என்னும் திரவம் மிகவும் ஆபத்தானது. ஒரு முறை ஒரு சமயப் பிரிவினர் இதைப் பயன் படுத்தி ஜப்பான் நாட்டையே கலங்க வைத்தது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கும். வன்னிப் போரின் இறுதிக் கட்டத்தில் ஏமது போராளிகளை மயக்கி உயிருடன் பிடிக்க இந்தத் திரவத்தை பயன்படுத்தியதாக கதை ஒன்று உண்டு. அதை உறுதி செய்யத்தான் ஆதாரம் இல்லை.




NAG & Co.
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

- ✓ CRIME
- ✓ CONVEYANCING
- ✓ MATRIMONIAL
- ✓ IMMIGRATION
- ✓ TRAFFIC MATTERS
- ✓ LANDLORD & TENANTS
- ✓ POLICE STATION MATTERS
- ✓ EMPLOYMENT MATTERS
- ✓ WORK PERMITS